கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:09.01.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு மாதிரியாக்கம் இணைத்தல் மற்றும் உருவகப்படுத்துதலுக்கான செயல்சார் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மைய இயக்குநரகத்தின் கீழ் இயங்கி வரும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரியல் தகவல் துறையின் மூலம் மூலக்கூறு மாதிரியாக்கம் இணைத்தல் மற்றும் உருவகப்படுத்துதலுக்கான நான்கு நாள் செயல்சார் பயிற்சியானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 முதல் 11ஆம் தேதி வரை நடத்தப்படுகிறது. இப்பயிற்சியில் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களான மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் புதுச்சேரி, PI இண்டஸ்ட்ரீஸ், ராஜஸ்தான், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ICAR - மத்திய மீன்வளக் கல்வி நிறுவனம், VELS பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், ICAR - கரும்பு இனப்பெருக்க நிறுவனம், செயின்ட் ஜான்ஸ் கல்லூரி, பாளையங்கோட்டை மற்றும் TNAU (உயிர் தொழில்நுட்பம், நோயியல், நூற்புழுவியல் மற்றும் தோட்டக்கலைத்துறை) மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயர் தகவலியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.ஜான் ஜோயல் வரவேற்புரையுடன் நான்கு நாட்கள் பயிற்சித் திட்டம் தொடங்கியது. அவரது வரவேற்புக் குறிப்பில் மூலக்கூறு மாதிரியாக்கம், இணைத்தல் மற்றும் உருவகப்படுத்துதலின் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தை பங்கேற்பாளர்களிடம் எடுத்துரைத்தார். வரவேற்புரையை தொடர்ந்து தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் தாவர தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் மற்றும் முதன்மையர் (முதுநிலை) முனைவர் ந.செந்தில் அவர்களின் முதன்மையுரையில் உயிரி தகவலியல் சார்ந்த கணக்கீட்டு நுட்பங்களின் முக்கியத்துவம், பயன்பாடுகள் மற்றும் நடைமுறை அறிவியலின் தாக்கத்தைப் பற்றி விவரித்தார். மேலும் மையத்தில் உள்ள மென்பொருள் வசதிகள் குறித்தும், அவர் விரிவாக எடுத்துரைத்தார். அதனை தொடர்ந்து பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் விதை மையத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.உமாராணி அவர்களின் துவக்கவுரையில் உயிரி தகவலியலின் சமீபத்திய வளர்ச்சி மற்றும் பயன்பாட்டு முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இறுதியாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறையின் துணை பேராசிரியர் முனைவர் சு.பாரதி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**